لَهُمْ مَّا يَشَآءُوْنَ فِيْهَا وَلَدَيْنَا مَزِيْدٌ ﴿۳۵﴾ وَكَمْ اَهْلَكْنَا قَبْلَهُمْ
مِّنْ قَرْنٍ هُمْ اَشَدُّ مِنْهُمْ بَطْشًا فَنَقَّبُوْا فِى الْبِلَادِ ؕ هَلْ مِنْ مَّحِيْصٍ ﴿۳۶﴾
اِنَّ فِىْ ذٰلِكَ لَذِكْرٰى لِمَنْ كَانَ لَهٗ قَلْبٌ اَوْ اَلْقَى السَّمْعَ وَهُوَ
شَهِيْدٌ ﴿۳۷﴾ وَلَقَدْ خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا فِىْ سِتَّةِ
اَيَّامٍ ۖ وَّمَا مَسَّنَا مِنْ لُّغُوْبٍ ﴿۳۸﴾ فَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَسَبِّحْ
بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوْعِ الشَّمْسِ وَقَبْلَ الْغُرُوْبِ ﴿۳۹﴾ وَمِنَ الَّيْلِ
فَسَبِّحْهُ وَاَدْبَارَ السُّجُوْدِ ﴿۴۰﴾ وَاسْتَمِعْ يَوْمَ يُنَادِ الْمُنَادِ مِنْ مَّكَانٍ
قَرِيْبٍ ۙ ﴿۴۱﴾ يَّوْمَ يَسْمَعُوْنَ الصَّيْحَةَ بِالْحَقِّ ؕ ذٰلِكَ يَوْمُ الْخُرُوْجِ ﴿۴۲﴾
اِنَّا نَحْنُ نُحْىٖ وَنُمِيْتُ وَاِلَيْنَا الْمَصِيْرُ ۙ ﴿۴۳﴾ يَوْمَ تَشَقَّقُ الْاَرْضُ عَنْهُمْ
سِرَاعًا ؕ ذٰلِكَ حَشْرٌ عَلَيْنَا يَسِيْرٌ ﴿۴۴﴾ نَحْنُ اَعْلَمُ بِمَا يَقُوْلُوْنَ وَمَآ
اَنْتَ عَلَيْهِمْ بِجَبَّارٍ ۫ فَذَكِّرْ بِالْقُرْاٰنِ مَنْ يَّخَافُ وَعِيْدِ ﴿۴۵﴾ ع ۳ ۱۶ ۱۷

سُوْرَةُ الذّٰرِيٰتِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتُّوْنَ اٰيَةً وَّفِيْهَا ثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالذّٰرِيٰتِ ذَرْوًا ۙ ﴿۱﴾ فَالْحٰمِلٰتِ وِقْرًا ۙ ﴿۲﴾ فَالْجٰرِيٰتِ يُسْرًا ۙ ﴿۳﴾ فَالْمُقَسِّمٰتِ
اَمْرًا ۙ ﴿۴﴾ اِنَّمَا تُوْعَدُوْنَ لَصَادِقٌ ۙ ﴿۵﴾ وَّاِنَّ الدِّيْنَ لَوَاقِعٌ ؕ ﴿۶﴾

35. அவர்கள் நாடியதெல்லாம் அதில் அவர்களுக்குண்டு; இன்னும், நம்மிடத்தில் (அவர்கள் கேட்டதைவிட) அதிகம் உண்டு.

36. இவர்களைவிட மிக்க பலசாலிகளாக இருந்த எத்தனையோ தலைமுறையினரை இவர்களுக்கு முன்னர் நாம் அழித்திருக்கின்றோம்; அவர்கள் (தப்பித்துக்கொள்ளும் இடத்தைத் தேடி) பல ஊர்களிலும் சுற்றித்திரிந்தனர்; (ஆயினும்) அவர்களுக்குத் தப்பி ஓடுமிடம் இருந்ததா?

37. எவருக்கு (அவர்களை அழித்தது பற்றி சிந்தித்துணரும்) உள்ளமிருக்கிறதோ அவருக்கு, அல்லது மனமுவந்தவராக செவிசாய்க்கின்றாரோ அவருக்கு நிச்சயமாக இதில் (நல்ல) படிப்பினை இருக்கின்றது.

38. இன்னும், திட்டமாக வானங்களையும், பூமியையும், அவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவைகளையும் ஆறு நாட்களில் நாம் படைத்தோம்; (அதனால்) எவ்வித களைப்பும் நம்மைத்தீண்டவில்லை.

39. எனவே (நபியே!) அவர்கள் (உம்மைக் குறை) கூறுவதைப் பற்றி(பொருட்படுத்தாது) நீர் பொறுமையுடனிருப்பீராக! இன்னும் சூரியஉதயத்திற்கு முன்னரும், (அதன்) அஸ்தமனத்திற்கு முன்னரும் உமதிரட்சகனின் புகழைக்கொண்டு துதி செய்து கொண்டுமிருப்பீராக!

40. இன்னும், இரவில் ஒருபாகத்திலும், (ஒவ்வொரு முறையும்) சிரம்பணி ந்(து தொழு)ததற்குப் பின்னரும் அவனைத் துதி செய்து கொண்டிருப்பீராக!

41. மேலும், சமீபமான இடத்திலிருந்து அழைப்பவர், அழைக்கும் நாளை(ப்பற்றி) செவிமடுப்பீராக!

42. பெரும் சப்தத்தை உண்மையாகவே, அவர்கள் கேட்கும் நாள்; அதுதான் (மரணித்தோர் சமாதியிலிருந்து) வெளிப்படும் நாள் ஆகும்.

43. நிச்சயமாக நாமே, உயிர்ப்பிக்கின்றோம்; மரணிக்குமாறும் நாம் செய்கின்றோம்; நம்மிடமே (யாவரும்) திரும்பி வரவேண்டியதிருக்கின்றது.

44. பூமி, அவர்களை விட்டும் பிளந்து விடும்நாளில், (அவர்களின் கப்ருகளிலிருந்து வெளியேறி அழைப்பாளரின்பால்) விரைந்தவர்களாக (வருவார்கள்); அது (படைப்பினங்களை) ஒன்றுதிரட்டுவதாகும்; (அது) நமக்கு எளிதானதாகும்.

45. (நபியே! உம்மைப்பற்றி) அவர்கள் கூறுவதை நாம் மிக அறிவோம்; மேலும், நீர் அவர்களை அடக்கியாள்பவரல்லர்; ஆகவே, (நம்முடைய) அச்சுறுத்தலைப்பயப்படுவோரை இந்தக் குர்ஆனைக் கொண்டு நீர் நல்லுபதேசம் செய்வீராக!

---

அத்தியாயம் : 51

## அத்தாரியாத் _ புழுதியைக் கிளறும் காற்றுகள்

வசனங்கள் : 60 மக்கீ ருகூஃகள் : 3

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. புழுதியை பறக்கவிடும் காற்றுகளின் மீது சத்தியமாக!

2. (மழையின் கனத்தை) சுமந்து வரும் மேகங்களின் மீதும் சத்தியமாக!

3. (கடல்களில்) இலகுவாகச் செல்கின்றவைகளின் மீதும் சத்தியமாக!

4. கட்டளையைப் பங்கிடுவோர் (களான வானவர்)கள் மீதும் சத்தியமாக!

5. (நற்செயலுக்கு நற்கூலியும், தீயசெயலுக்கு தண்டனையும் உண்டென்று) நிச்சயமாக, நீங்கள் வாக்களிக்கப் படுவதெல்லாம் உண்மையானதாகும்.

6. நிச்சயமாக, (செயலுக்குத் தக்க) கூலி கொடுக்கப்படுவது நடந்தே தீரும்.

وَالسَّمَآءِ ذَاتِ الْحُبُكِ ﴿٧﴾ اِنَّكُمْ لَفِیْ قَوْلٍ مُّخْتَلِفٍ ﴿٨﴾ یُّؤْفَكُ عَنْهُ
مَنْ اُفِكَ ﴿٩﴾ قُتِلَ الْخَرّٰصُوْنَ ﴿١٠﴾ الَّذِیْنَ هُمْ فِیْ غَمْرَةٍ سَاهُوْنَ ﴿١١﴾
یَسْـَٔلُوْنَ اَیَّانَ یَوْمُ الدِّیْنِ ﴿١٢﴾ یَوْمَ هُمْ عَلَى النَّارِ یُفْتَنُوْنَ ﴿١٣﴾ ذُوْقُوْا
فِتْنَتَكُمْ ؕ هٰذَا الَّذِیْ كُنْتُمْ بِهٖ تَسْتَعْجِلُوْنَ ﴿١٤﴾ اِنَّ الْمُتَّقِیْنَ فِیْ جَنّٰتٍ
وَّ عُیُوْنٍ ﴿١٥﴾ اٰخِذِیْنَ مَاۤ اٰتٰىهُمْ رَبُّهُمْ ؕ اِنَّهُمْ كَانُوْا قَبْلَ ذٰلِكَ
مُحْسِنِیْنَ ﴿١٦﴾ كَانُوْا قَلِیْلًا مِّنَ الَّیْلِ مَا یَهْجَعُوْنَ ﴿١٧﴾ وَ بِالْاَسْحَارِ هُمْ
یَسْتَغْفِرُوْنَ ﴿١٨﴾ وَ فِیْۤ اَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّآئِلِ وَ الْمَحْرُوْمِ ﴿١٩﴾ وَ فِی
الْاَرْضِ اٰیٰتٌ لِّلْمُوْقِنِیْنَ ﴿٢٠﴾ وَ فِیْۤ اَنْفُسِكُمْ ؕ اَفَلَا تُبْصِرُوْنَ ﴿٢١﴾ وَ فِی
السَّمَآءِ رِزْقُكُمْ وَ مَا تُوْعَدُوْنَ ﴿٢٢﴾ فَوَ رَبِّ السَّمَآءِ وَ الْاَرْضِ اِنَّهٗ لَحَقٌّ
مِّثْلَ مَاۤ اَنَّكُمْ تَنْطِقُوْنَ ﴿٢٣﴾ هَلْ اَتٰىكَ حَدِیْثُ ضَیْفِ اِبْرٰهِیْمَ
الْمُكْرَمِیْنَ ﴿٢٤﴾ اِذْ دَخَلُوْا عَلَیْهِ فَقَالُوْا سَلٰمًا ؕ قَالَ سَلٰمٌ ۚ قَوْمٌ مُّنْكَرُوْنَ ﴿٢٥﴾
فَرَاغَ اِلٰۤى اَهْلِهٖ فَجَآءَ بِعِجْلٍ سَمِیْنٍ ﴿٢٦﴾ فَقَرَّبَهٗۤ اِلَیْهِمْ قَالَ اَلَا
تَاْكُلُوْنَ ﴿٢٧﴾ فَاَوْجَسَ مِنْهُمْ خِیْفَةً ؕ قَالُوْا لَا تَخَفْ ؕ وَ بَشَّرُوْهُ بِغُلٰمٍ
عَلِیْمٍ ﴿٢٨﴾ فَاَقْبَلَتِ امْرَاَتُهٗ فِیْ صَرَّةٍ فَصَكَّتْ وَجْهَهَا وَ قَالَتْ عَجُوْزٌ
عَقِیْمٌ ﴿٢٩﴾ قَالُوْا كَذٰلِكِ ۙ قَالَ رَبُّكِ ؕ اِنَّهٗ هُوَ الْحَكِیْمُ الْعَلِیْمُ ﴿٣٠﴾

ع ٣ ١٨ وقف لازم

7. பாதைகளையுடைய வானத்தின் மீது சத்தியமாக,

8. நிச்சயமாக நீங்கள், (நபியைப்பற்றி) மாறுபட்ட கூற்றில் இருக்கின்றீர்கள்.

9. (அல்லாஹ்வுடைய தூதர் கொண்டுவந்த உண்மையானவிஷயங்களை ஏற்பதைவிட்டும்) திருப்பப்பட்டவர் (வேதமாகிய) அதை விட்டும் திருப்பப் படுகிறார்.

10. பொய்யர்கள் அழிந்தேபோவர்.

11. அவர்கள் எத்தகையோரென்றால் (தங்கள்) மடமையால், (மறுமையையே) மறந்தோராய் இருப்போர் (ஆவர்).

12. "கூலி கொடுக்கும் நாள் எப்பொழுது (வரும்)?" என்று அவர்கள் (பரிகாசமாகக்) கேட்கின்றனர்.

13. (அந்நாள்) அவர்கள் நெருப்பில் (பொசுக்கப்பட்டு) தண்டிக்கப் படும் நாள் .

14. (அவர்களிடம்,) "உங்கள் தண்டனையைச் சுவைத்துப் பாருங்கள். (எப்பொழுது வருமென்று) நீங்கள் எதனை அவசரப்பட்டுக் கொண்டிருந்தீர்களோ அது இது தான்" (என்றும் கூறப்படும்).

15. நிச்சயமாக, பயபக்தியுடையவர்கள் (சுவனபதிகளின்) சோலைகளிலும், நீரூற்றுகளிலும் இருப்பார்கள்.

16. அவர்கள், தங்களிரட்சகன் அவர்களுக்குக் கொடுத்ததை (திருப்தியுடன்) எடுத்துக் கொண்டோராக (இருப்பர்); நிச்சயமாக, அவர்கள் அதற்கு முன்னர் நன்மை செய்வோராகவே இருந்தார்கள்.

17. இரவில் வெகுசொற்ப(நேர)மே தூங்கக் கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

18. மேலும், அவர்கள் விடியற்காலை(ஸஹர் நேரங்)களில் (எழுந்து அல்லாஹ்வை வணங்கி, தங்களிரட்சகனிடம்) மன்னிப்புக் கோரிக் கொண்டிருப்பார்கள்.

19. இன்னும், அவர்களுடைய செல்வங்களில் கேட்போருக்கும், கேட்காதோருக்கும் உரிமையுண்டு.

20. மேலும், உறுதி(யாக விசுவாசங்) கொண்டவர்களுக்குப் பூமியில் அத்தாட்சிகளிருக்கின்றன .

21. உங்களுக்குள்ளேயும் _(பல அத்தாட்சிகள் இருக்கின்றன; அவைகளை) நீங்கள் (கவனித்துப்) பார்க்கமாட்டீர்களா?

22. மேலும், உங்களுடைய உணவும், (மற்றும்) நீங்கள் வாக்களிக்கப்பட்டீர்களே அவையும் வானத்திலிருக்கின்றன.

23. ஆகவே, வானம், மற்றும் பூமியுடைய இரட்சகன் மீது சத்தியமாக, (உங்கள் வார்த்தைகளை) நிச்சயமாக நீங்கள் தாம் கூறுகின்றீர்கள் என்ப(தில் சந்தேகமில்லாதிருப்ப)தைப்போல, நிச்சயமாக இது (_இந்தக் குர்ஆனில் உள்ள யாவும்) உண்மையானதாகும்.

24. (நபியே!) கௌரவத்திற்குரியவர்களான இப்றாஹீமுடைய விருந்தினர்களின் செய்தி உமக்கு வந்ததா?

25. அவர்கள், அவரிடம் நுழைந்தபொழுது "சாந்தி உண்டாவதாக!" என்று கூறினார்கள். (அதற்கு இப்றாஹீம் உங்களுக்கும்) "சாந்தி உண்டாவதாக!" என்று கூறி (இவர்கள் நமக்கு) அறிமுகமில்லாத சமூகத்தார்! (என்று தன் மனதில் எண்ணிக்கொண்டு)

26. பின்னர் தன் இல்லத்தாரிடம் விரைவாகச் சென்று (நெருப்பில் சுடப்பட்ட) கொழுத்தகாளைக் கன்றைக் கொண்டு வந்தார்.

27. பின்னர், அதனை அவர்கள் அருகில் வைத்தார் (அவர்கள் உண்ணாததால்) அவர்களிடம், "நீங்கள் உண்ணமாட்டீர்களா" என்று கேட்டார்.

28. (பின்னும் புசிக்காமல் இருந்ததால் தன் மனதில்) அவர்கள் பற்றிய பயத்தை உணர்ந்தார். அப்போது "(இப்றாஹீமே!) நீர் பயப்படாதீர்," என்று அவர்கள் கூறினர்; மேலும், (இஸ்ஹாக் என்னும்) அறிவார்ந்த ஆண் குழந்தை(அவருக்குப் பிறக்குமென்ற செய்தி)யைக்கொண்டு அவருக்கு நன்மாராயம் கூறினார்கள்.

29. பின்னர், (இதனைச் செவியுற்ற) அவருடைய மனைவி (ஸாரா) உரத்த சப்தத்தில் அவர்கள் எதிரில் வந்து, தன் முகத்தில் அடித்துக் கொண்டு, "(நானோ) மலட்டுக்கிழவி (எவ்விதம் எனக்குக் குழந்தை பிறக்கும்?)" என்று கூறினார். (அதற்கவர்கள்),

30. " இவ்வாறே உமதிரட்சகன் கூறுகின்றான்; நிச்சயமாக, அவனே தீர்க்கமான அறிவுடையோன்; (யாவையும்) நன்கறிந்தோன் என்று கூறினார்கள்.

الجزء ۲۷

قَالَ فَمَا خَطْبُكُمْ اَيُّهَا الْمُرْسَلُوْنَ ﴿۳۱﴾ قَالُوْٓا اِنَّآ
اُرْسِلْنَآ اِلٰى قَوْمٍ مُّجْرِمِيْنَ ﴿۳۲﴾ لِنُرْسِلَ عَلَيْهِمْ حِجَارَةً مِّنْ طِيْنٍ ﴿۳۳﴾ مُّسَوَّمَةً
عِنْدَ رَبِّكَ لِلْمُسْرِفِيْنَ ﴿۳۴﴾ فَاَخْرَجْنَا مَنْ كَانَ فِيْهَا مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿۳۵﴾
فَمَا وَجَدْنَا فِيْهَا غَيْرَ بَيْتٍ مِّنَ الْمُسْلِمِيْنَ ﴿۳۶﴾ وَتَرَكْنَا فِيْهَآ اٰيَةً
لِّلَّذِيْنَ يَخَافُوْنَ الْعَذَابَ الْاَلِيْمَ ﴿۳۷﴾ وَفِيْ مُوْسٰٓى اِذْ اَرْسَلْنٰهُ اِلٰى
فِرْعَوْنَ بِسُلْطٰنٍ مُّبِيْنٍ ﴿۳۸﴾ فَتَوَلّٰى بِرُكْنِهٖ وَقَالَ سٰحِرٌ اَوْ مَجْنُوْنٌ ﴿۳۹﴾
فَاَخَذْنٰهُ وَجُنُوْدَهٗ فَنَبَذْنٰهُمْ فِى الْيَمِّ وَهُوَ مُلِيْمٌ ﴿۴۰﴾ وَفِيْ عَادٍ
اِذْ اَرْسَلْنَا عَلَيْهِمُ الرِّيْحَ الْعَقِيْمَ ﴿۴۱﴾ مَا تَذَرُ مِنْ شَيْءٍ اَتَتْ
عَلَيْهِ اِلَّا جَعَلَتْهُ كَالرَّمِيْمِ ﴿۴۲﴾ وَفِيْ ثَمُوْدَ اِذْ قِيْلَ لَهُمْ تَمَتَّعُوْا
حَتّٰى حِيْنٍ ﴿۴۳﴾ فَعَتَوْا عَنْ اَمْرِ رَبِّهِمْ فَاَخَذَتْهُمُ الصّٰعِقَةُ وَ
هُمْ يَنْظُرُوْنَ ﴿۴۴﴾ فَمَا اسْتَطَاعُوْا مِنْ قِيَامٍ وَّمَا كَانُوْا مُنْتَصِرِيْنَ ﴿۴۵﴾
وَقَوْمَ نُوْحٍ مِّنْ قَبْلُ اِنَّهُمْ كَانُوْا قَوْمًا فٰسِقِيْنَ ﴿۴۶﴾ وَ ع ۲ / ۱۳
السَّمَآءَ بَنَيْنٰهَا بِاَيْىدٍ وَّاِنَّا لَمُوْسِعُوْنَ ﴿۴۷﴾ وَالْاَرْضَ فَرَشْنٰهَا
فَنِعْمَ الْمٰهِدُوْنَ ﴿۴۸﴾ وَمِنْ كُلِّ شَيْءٍ خَلَقْنَا زَوْجَيْنِ لَعَلَّكُمْ
تَذَكَّرُوْنَ ﴿۴۹﴾ فَفِرُّوْٓا اِلَى اللّٰهِ اِنِّيْ لَكُمْ مِّنْهُ نَذِيْرٌ مُّبِيْنٌ ﴿۵۰﴾

31. (பின்னர் இப்றாஹீம் மலக்குகளிடம்) "தூதர்களே! உங்கள் காரியமென்ன? (எதற்கு நீங்கள் இங்கு வந்தீர்கள்?)" என்று கேட்டார்.
32. அ(தற்க)வர்கள் "நிச்சயமாக, நாங்கள் குற்றவாளிகளான ஒரு சமூகத்தார்பால் அனுப்பப்பட்டுள்ளோம்" என்று கூறினார்கள்.
33. "நாங்கள், அவர்களின் மீது களிமண்ணால் செய்த (சுட்ட) கற்களை எறிவதற்காக (அனுப்பப்பட்டுள்ளோம்).
34. வரம்பு மீறியவர்களுக்காக, உமது இரட்சகனிடத்தில் (பெயர்கள் எழுதப்பட்டு) அடையாளமிடப்பட்டவைகளாக (அவை இருக்கின்றன.)"
35. ஆகவே (அவர்கள் அழிக்கப்படுவதற்கு முன்) விசுவாசங்கொண்டவர்களி லிருந்து அ(ந்நகரத்)திலிருந்தவர்களை நாம் வெளியேற்றிவிட்டோம்.
36. பின்னர், அதில் முஸ்லிம்களிலிருந்து ஒரு வீட்டைத்தவிர (மற்றெதையும்) நாம் காணவில்லை.
37. மேலும், துன்புறுத்தும் வேதனையை பயப்படுகிறார்களே அவர்களுக்கு அதில் ஓர் அத்தாட்சியை நாம் விட்டு வைத்தோம்.
38. மேலும், மூஸாவி(ன் சரித்திரத்தி)லும் _ (ஒரு படிப்பினை இருக்கின்றது), தெளிவான சான்றுடன் ஃபிர்அவ்னின்பால் அவரை நாம் அனுப்பிய போது,
39. அவன் தன்னுடைய (பக்கபலமென்று நினைத்தபடைகள், அதிகாரம் ஆகியவற்றின்) பலத்தால் (அவரைப்) புறக்கணித்தான்; இன்னும் (இவர்) சூனியக்காரர்; அல்லது பைத்தியக்காரர் என்று அவன் கூறினான்.
40. ஆதலால், அவனையும், அவனுடைய படைகளையும் நாம் பிடித்தோம்; பின்னர் அவர்களைக் கடலில் எறிந்துவிட்டோம்; அவனோ (என்றென்றுமே) நிந்தனைக்குள்ளாக்கப்பட்டுவிட்டான்.
41. 'ஆது' வி(ன்சமூகத்தார்களி)லும் _ (ஓர் அத்தாட்சி உண்டு) அவர்கள் மீது, நாம் (நாசகரமான) மலட்டுக்காற்றை அனுப்பிய சமயத்தில்,
42. எப்பொருளிலிருந்தும் அதன்மீது அ(க்காற்றான)து (கடந்து) வந்து, அதை மக்கிப் போனதைப் போன்று ஆக்கியே தவிர அது விட்டு வைக்கவில்லை.
43. 'ஸமூது' வி(ன்கூட்டத்தாரி)லும் (ஓர் அத்தாட்சியுண்டு) "நீங்கள் ஒரு காலம் வரையில் சுகம் அனுபவியுங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்பட்டபோது,
44. தங்கள் இரட்சகனின் கட்டளையை அவர்கள் மீறினார்கள்; ஆகவே, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, பயங்கரமான பெரும் சப்தம் அவர்களைப் பிடித்துக்கொண்டது.
45. ஆகவே, அவர்கள் நிற்கவும் சக்திபெறவில்லை; (நம்முடைய வேதனையிலிருந்து தப்பிக்க எவரிடமிருந்தும்) உதவி பெறுபவர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை.
46. (இவர்கள் அனைவருக்கும்) முன்னர் நூஹுடைய சமூகத்தாரையும் (நாம் அழித்துவிட்டோம்). நிச்சயமாக அவர்கள், பாவம் செய்யும் சமூகத்தாராகவே இருந்தனர்.
47. மேலும், வானத்தை (எவருடைய உதவியுமின்றி) நம்முடைய சக்தியைக் கொண்டே அதை நாம் அமைத்தோம்; நிச்சயமாக நாம் (படைக்கின்ற காரியத்தில்) மிக்க விசாலத்தை உடையோராக இருக்கிறோம் (யாவும் நம்சக்திக்குட்பட்டதே).
48. அன்றியும், பூமியை _ அதனை நாம் (விசாலமாக) விரித்தோம்; (அதனைச் சீர்படுத்தி செவ்வையாக்கி) விரிப்போரில் (நாம்) நல்லோராவோம்.
49. நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக ஒவ்வொருபொருளிலிருந்தும் (ஆண், பெண் கொண்ட) இருவகையை நாம் படைத்திருக்கின்றோம்.
50. ஆகவே, "(நிராகரிப்பு, பாவம் ஆகியவற்றிலிருந்து விலகி), அல்லாஹ்வின் பக்கம் நீங்கள் விரைந்து செல்லுங்கள்; நிச்சயமாக நான், அவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவ(னாக இருக்கிறே)ன்;

وَلَا تَجْعَلُوْا مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ ؕ اِنِّیْ لَكُمْ مِّنْهُ نَذِیْرٌ مُّبِیْنٌ ﴿٥١﴾ كَذٰلِكَ
مَاۤ اَتَی الَّذِیْنَ مِنْ قَبْلِهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا قَالُوْا سَاحِرٌ اَوْ مَجْنُوْنٌ ﴿٥٢﴾
اَتَوَاصَوْا بِهٖ ۚ بَلْ هُمْ قَوْمٌ طَاغُوْنَ ﴿٥٣﴾ فَتَوَلَّ عَنْهُمْ فَمَاۤ اَنْتَ بِمَلُوْمٍ ﴿٥٤﴾
وَّذَكِّرْ فَاِنَّ الذِّكْرٰی تَنْفَعُ الْمُؤْمِنِیْنَ ﴿٥٥﴾ وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ
اِلَّا لِیَعْبُدُوْنِ ﴿٥٦﴾ مَاۤ اُرِیْدُ مِنْهُمْ مِّنْ رِّزْقٍ وَّمَاۤ اُرِیْدُ اَنْ
یُّطْعِمُوْنِ ﴿٥٧﴾ اِنَّ اللّٰهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِیْنُ ﴿٥٨﴾ فَاِنَّ
لِلَّذِیْنَ ظَلَمُوْا ذَنُوْبًا مِّثْلَ ذَنُوْبِ اَصْحٰبِهِمْ فَلَا یَسْتَعْجِلُوْنِ ﴿٥٩﴾
فَوَیْلٌ لِّلَّذِیْنَ كَفَرُوْا مِنْ یَّوْمِهِمُ الَّذِیْ یُوْعَدُوْنَ ﴿٦٠﴾ ع ٣

## سورة الطور مكية وهي تسع واربعون اية وفيها ركوعان

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ○

وَالطُّوْرِ ﴿١﴾ وَكِتٰبٍ مَّسْطُوْرٍ ﴿٢﴾ فِیْ رَقٍّ مَّنْشُوْرٍ ﴿٣﴾ وَّالْبَیْتِ الْمَعْمُوْرِ ﴿٤﴾
وَالسَّقْفِ الْمَرْفُوْعِ ﴿٥﴾ وَالْبَحْرِ الْمَسْجُوْرِ ﴿٦﴾ اِنَّ عَذَابَ رَبِّكَ لَوَاقِعٌ ﴿٧﴾
مَّا لَهٗ مِنْ دَافِعٍ ﴿٨﴾ یَّوْمَ تَمُوْرُ السَّمَآءُ مَوْرًا ﴿٩﴾ وَّتَسِیْرُ الْجِبَالُ سَیْرًا ﴿١٠﴾
فَوَیْلٌ یَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِیْنَ ﴿١١﴾ الَّذِیْنَ هُمْ فِیْ خَوْضٍ یَّلْعَبُوْنَ ﴿١٢﴾ یَوْمَ وقف لازم
یُدَعُّوْنَ اِلٰی نَارِ جَهَنَّمَ دَعًّا ﴿١٣﴾ هٰذِهِ النَّارُ الَّتِیْ كُنْتُمْ بِهَا تُكَذِّبُوْنَ ﴿١٤﴾

51. மேலும், அல்லாஹ்வுடன் வேறொரு (வணக்கத்திற்குரிய) நாயனை ஆக்காதீர்கள்;
நிச்சயமாக நான், அவனிடமிருந்து உங்களுக்கு தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை
செய்பவன்(என்று நபியே! நீர் கூறுவீராக!).
52. இவ்வாறே அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களுக்கு எந்தத்தூதரும்
வந்ததில்லை; (அவர்களிடம் வந்த அத்தூதரை) சூனியக்காரர் அல்லது
பைத்தியக்காரர் என்று அவர்கள் கூறியே தவிர.
53. இவ்வாறு (கூறுமாறே) அவர்கள் (தங்களுக்குள் பரம்பரையாக) ஒருவருக்கொருவர்
உபதேசம்செய்து வந்தனரா? இல்லை! அவர்கள் (இயற்கையிலேயே) அட்டூழியம் செய்யும்
கூட்டத்தாராவர்.
54. ஆகவே, (நபியே!) நீர் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக! (அதற்காக) நீர்
நிந்திக்கப்படுபவரல்லர்.
55. மேலும் (நபியே!) நீர் நல்லுபதேசம் செய்வீராக! ஏனென்றால், நிச்சயமாக
நல்லுபதேசம் விசுவாசிகளுக்குப் பயனளிக்கும்.
56. மேலும், ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே
தவிர நான் படைக்கவில்லை.
57. அவர்களிடத்தில் (என் படைப்புகளுக்காக) நான் யாதொரு உணவையும்
நாடவில்லை; அன்றியும், எனக்கு அவர்கள் உணவளிப்பதையும் நான் நாடவில்லை.
58. (நபியே! நீர் கூறுவீராக:) "நிச்சயமாக அல்லாஹ்_அவன்தான் (யாவருக்கும்)
மிக்க உணவளிப்பவன்; பலமுடையவன்; உறுதியானவன்."
59. எனவே, நிச்சயமாக அநியாயம் செய்து விட்டார்களே, அவர்களுக்கு (முன் வாழ்ந்த)
அவர்களுடைய சிநேகிதர்களுக்கிருந்த பங்கைப்போன்று (வேதனையில்)பங்குண்டு.
ஆகவே, அவர்கள் (தண்டனைக்காக என்னிடம்) அவசரப்பட வேண்டாம்.
60. ஆகையால், நிராகரித்தோருக்கு_ அவர்கள் வாக்களிக்கப்பட்டுள்ளார்களே
அத்தகைய அவர்களுடைய நாளில், கேடுதான்.

---

அத்தியாயம் : 52

## அத்தூர் _ மலை

வசனங்கள் : 49 மக்கீ ருகூஃகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. தூர் (மலை) மீது சத்தியமாக!
2. எழுதப்பட்ட நூலின் மீது சத்தியமாக!
3. விரித்துவைக்கப்பட்ட ஏட்டில்_
4. பைத்துல் மஃமூர் மீது சத்தியமாக!
5. உயர்த்தப்பட்ட முகட்டின் மீது சத்தியமாக!
6. (நெருப்பினால்)மூட்டப்பட்ட கடலின் மீது சத்தியமாக!
7. (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகனின் வேதனை (அவர்களுக்கு)நிகழும்_
8. அதனைத் தடுப்பவர் எவருமில்லை.
9. வானம் கடுமையாக அசைந்து (திருகையைப் போன்று) சுற்றும்நாளில்;
10. இன்னும், மலைகள் (இடம் பெயர்ந்து) ஒரே நடையாக நடக்கும்.
11. (நபியே! உம்மைப்) பொய்ப்பித்துக் கொண்டிருந்தோருக்கு அந்நாளில் கேடுதான்.
12. அவர்கள் எத்தகையோரென்றால், வீண் விதண்டாவாதத்தில் (மூழ்கி)
விளையாடுகின்றனர்.
13. அவர்கள் நரகத்தின்பால் ஒரே தள்ளாகத் தள்ளப்படும் நாளில்.
14. (அவர்களிடம்) "நீங்கள் எதனைப் பொய்யாக்கிக் கொண்டிருந்தீர்களோ, அந் (நரக)
நெருப்பு இதுதான்" (என்று கூறப்படும்).